ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

जटिली मुण्डी लुंछितकेशः काषायांबरबहुकृतवेषः ।

पश्यन्नपि च न पश्यति मूढो ह्युदरनिमित्तं बहुकृतवेषः ॥

मूढः - அறிவில்லாத ஒருவன்

जटिली - ஜடையைத்தரிக்கிறான்

मुण्डी - மொட்டைத்தலையுடனிருக்கிறான்

लुंछितकेशः - தலையில் கிராப் செய்துகொள்கிறான்

काषायांबर बहुकृतवेषः - காஷாய வஸ்திரத்தால் அதிகமாகச் செய்யப்பட்ட வேஷத்தையுடையவன்

पश्यन्नपि - பார்த்துக்கொண்டிருந்தபோதிலும்

न पश्यति - பார்க்காதவனாகயிருக்கிறான்.

उदरनिमित्तं - வயிறுவளர்க்க வேண்டி

बहुकृतवेषोहि - பலவிதமாய்ப் போடப்பட்ட வேஷத்தையுடையவனாகிறானன்றோ.

புத்தியில்லாத ஒருவன் தன் வயிற்றை எவ்விதமாகிலும் நிறப்ப வேண்டுமெனக்கருதி ஒரு சமயம் ஜடாதாரியாக இருக்கிறான். மற்றொரு சமயம் சிரஸ்ஸிலிருக்கும் கேசங்களைப் பூராவும் எடுத்துவிடுகிறான். பின்னொரு ஸமயம் கேசங்களைப் பலவாறாகச சேதித்துக் கொள்கிறான். ஒருகால் காஷாய வஸ்திரங்களைத்தரித்துக்கொண்டு பல்வித வேஷம் போடுகிறான். தன் எதிரில் நிற்கும் மனிதனை பிரத்தியக்ஷத்தில் பார்த்தும் பார்க்காதவனாக நடிக்கிறான். இவ்விதம் எந்த வேஷத்தைப் போட்டாவது பிறரை வஞ்சித்து தன் வயிற்றை வளர்ப்பதே இப்பிறவிக்கு முக்கியமான பயனெனக்கருதி சிலர் ஜன்மாவை வீண் பண்ணுகிறார்கள், இது சரியல்ல. இவ்வித ஜன்மாவையும் அதில் ஏற்படும் ஸாம்ஸாரிகமான துக்கத்தையும் அடியோடு விலக்க வேண்டியதற்கு வேண்டிய ஸாதனங்களை ஸம்பாதித்து அவைகளால் உத்தமமான சிரேயஸ்ஸைப்பெற முயலவேண்டும்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

க்ஷய-௵ ஆடி-௴ ௨௮-௳

# கும்பகோண அத்வைத ஸபை.

இந்த ஸபையானது, சென்ற அக்ஷய-௵ ஆடி-௴ 14-௳ (29—7—26) குருவாரத்தன்று கும்பகோணம் ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்ய ஸ்வாமிகளவர்கள் ஸ்ரீ மடத்தில் உபக்கிரமிக்கப்பட்டு, வழக்கம் போல் ஒரு வாரம் நடைபெற்றது. இந்த ஸபையின் பரீக்ஷாதிகாரிகளான, பிர்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரியள், பிர்மஸ்ரீ க. கிருஷ்ணசாஸ்திரியள், பிர்மஸ்ரீ வெங்கிடசுப்பா சாஸ்திரியள், பிர்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரியள், இவர்களும் மற்றும் ஸபைக்கு வந்த வித்வான்களுடைய ஸங்கியையும் சேர்ந்து, 50 வித்வான்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஒவ்வொரு தினமும் காலை 7½ மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 3 மணி முதல் 5½ மணி வரையிலும், வாசிக லேகன பரீக்ஷைகளும் வாக்கியார்த்தங்களும் நன்றாய் நடைபெற்றன. பிரதிதினமும் ஸ்ரீ பரமாசார்ய கௌரவம் 1, சுருதி ஸ்மிருதிகளின் பிராமாண்ய ஸமர்த்தனம் 2, ஸத்யகாமஜாபால ஆக்யாயிகையின் தத்வ நிரூபணம் 3, கௌதம தர்மத்தில் கூறப்பட்ட எட்டு ஆத்மகுணங்களின் ஸ்வரூப நிரூபணம் 4, பாகவதம் 11-ஆவது ஸ்கந்தம் 5-ஆவது அத்தியாயத்தில் சொல்லிய 'லோகேவ்யவாயாமிஷமத்யஸேவா' என்கிற சுலோகத்தின் ரகஸ்யார்த்தம் 6, மத பேதப்பிரகாரம் முக்தி நிரூபணம் 7 என்கிற இவ்விஷயங்களை ஸபாத்தியக்ஷர்கள் முறையே எளிய தமிழ் நடையில் இரவு 7 மணி முதல் 9 மணிவரையில் உபந்நியாஸம் செய்து அந்த ஸமயம் வந்திருக்கும் ஸகல ஜனங்களுக்கும் அதிக ஆனந்தத்தை யுண்டுபண்ணினார்கள். ஒவ்வொரு தினமும் ஷை ஸபா ஸிகிரிடெரி பிர்மஸ்ரீ ராவ்பஹதூர் S. அப்பு சாஸ்திரியளவர்களும் பிர்மஸ்ரீ கே. சுந்தராமய்யாவர்களும் மற்றும் பலலௌகிக கனவான்களும் ஸபைக்கு வந்து அலங்கரித்தார்கள். மைலாப்பூர் பிர்மஸ்ரீ கனம், கே, பாலசுப்பிரமணியய்யர் அவர்

ளர் இந்தஸபைக்கு விஜயம்செய்து, ஸபையை அலங்கரித்தது மிக வும் பாராட்டத் தக்கதே. ஸபையின் முடிவு தினத்தில் வழக்கம் போல் பண்டிதர்களுக்கு ஸம்மானம் செய்தபிறகு ஸபா ஸிகிரி டெரியான பிர்மஸ்ரீ சாஸ்திரியளவர்கள், இந்தஸபையின் அபிவிரு த்தியை யுத்தேசித்து வெகுகாலமாய் த்தம்மால் தீர்மானிக்கப்பட் டசிலவிஷயங்களை தெளிவாய் நிரூபித்து முடிவில் கனம் பாலசுப் பிரமணியஅய்யாவர்களை இந்தஸபைக்குப் பிரஸிடெண்டாக இருக் கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள். அப்பால் பிர்மஸ்ரீ கனம் பாலசுப்பிரமணிய அய்யாவர்கள், ஸிகிரிடெரியவர்கள் சொ ன்ன விஷயத்தை அங்கீகரிப்பதற்குற்ற யோக்கியதை தற்காலம் தம்மிடமில்லையென்றும் பெரியோர்களின் அனுக்கிரகத்தால் இனி அந்த யோக்கியதை ஏற்படவேண்டுமென்றும் கூறி, இது போன் ற பல ஸபைகள் நம் தேசத்தில் ஏற்படவேண்டியது முக்கிய மென்றும், இந்த ஸபையால் அத்வைத சாஸ்திராபிவிருத்தியும், நம் தேசத்திற்கு நன்மையும் ஏற்பட்டிருக்கிறதென்றும், பண்டி தர்களை ஆராதிக்கவேண்டியது அவசியமென்றும், அவ்விதம் நாம் ஆராதித்தோமானால், அவர்களிடமிருந்து பிரதிப் பிரயோஜனத் தை நாம் கருதாவிட்டாலும், அவர்களாகவே தமதுகடமைஎன்று எண்ணி லோகோபகாரத்தைச் செய்வார்களென்றும், ஸிகிரி டெரியவர்களால் இந்த ஸபையின் அபிவிருத்தியை யுத்தேசித்துச் சொல்லப்பட்ட விஷயங்கள் உசிதமானவை, அவ்விதமே செய்ய வேண்டியது அவசியமென்றும் இவ்வித காரியங்களில் தாமும் தம்மாலியன்றவரையில் முயற்சி எடுத்துக்கொள்ள சித்தமாயிருப் பதாகவும், விஸ்தாரமாய் விஷயங்களை நன்கு உபன்யஸித்து, சொற்சுவையாலும், விஷயகௌரவத்தாலும், இனிய மொழிகளா லும், ஸநாதந தர்மாபிவிருத்தியில் தமக்கிருக்கும் ஊக்கத்தாலும், சபையிலுள்ள பண்டிதர் முதலானஎல்லாஜனங்களையும், ஆனந்தக் கடலில் அமிழ்த்தினார்கள். ஸ்ரீஜகத்குரு மஹாஸ்வாமிகளவர்கள் ஆக்ஞையின் பேரில் ஸ்ரீ மடம் மானேஜரவர்கள் இந்த ஸபா நிமித்தமாக வந்திருக்கும் வித்வான்களுக்கும் மற்றுமுள்ளோர்க ளுக்கும் அந்தந்தக்காலங்களில் சிறந்த பக்ஷ்ய போஜ்யங்களுடன் அன்பாக ஸந்தர்ப்பணையை நடத்திவைக்கும்படி செய்தது எல்லா ஜனங்களுக்கும் அதிக திருப்தியை யுண்டுபண்ணிற்று. இந்த ஸபையின் முன்னேற்றத்தைக் குறித்துப் பாடுபட்ட காலம்

சென்ற மஹாமஹோபாத்தியாய பிர்மஸ்ரீ, ப. கணபதி சாஸ்திரிய ளவர்களின் ஞாபகார்த்தமாய் ஷெயார் பெயரால் இச்சபையி லிருந்தும் ஒவ்வொரு வருஷமும் நியாயரக்ஷாமணி கிரந்தத்தில் பரீக்ஷை கொடுத்து தேறியவர்களுக்கு ரூபாய் 15—0—0 பிரை ஸாக ஸம்மானம் செய்வதாக ஸபையில் ஓர் தீர்மானம் நிறை வேறியிருக்கிறது. இன்னும் சில ஆஸ்திகர்களால் பல ப்ரைஸ் கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளையும் மற்றொரு ஸமயம் வெளியிடுகிறோம். இவ்விதம் வெகு விமர்சையாய் இவ் வருஷத்திய ஸபை முடிவுபெற்றது. இனியும் இச்சபை மெம் மேலும் விசேஷமாக விருத்தியடையவேண்டி, ஸர்வேசுவரரான பரம்பொருளை வேண்டுகிறோம். சுபம்.

உபபத்சுராதிபர்.

---

# பகவத்கிதை.

௩சுஅ-வது பக்கத் தொடர்ச்சி.

வேறு சிலர் अशोच्यानन्वशोचस्त्वं என்றாரம்பித்து स्थितोऽस्मि गत-सन्देहः என்ற சுலோகபரியந்தம் நடுவில் திருதராஷ்டிரன் ஸஞ் ஜயன் வசனங்களை நீக்கி மற்றவைகள் கிருஷ்ணார்ஜுனர்களால் அப்படியே கூறப்பெற்றதென்கின்றனர். இவர்கள் பாஷ்யங்க ளிற் பல விடங்களில்

**तथा च भगवता स्वयमेवोक्तं आह च भगवान् वासुदेवः, वक्ष्यति च भगवान् स्वयमेव ।**

என்பதாதி வாக்கியங்களைத் தனக்குப் பிரமாணமாய்க் காட்டு கின்றனர். வேறு சிலர் ஸகல லோகத்திற்கும் க்ஷேமத்தைக் கொடுக்கக் கூடிய கீதா ரகஸ்யத்தைப் பகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்தார். அதனை வேதவ்யாசர் ஸர்வக்ஞ மூர்த்தியாகை யாலும் விஷ்ணு அம்சமானதாலும் ஸாக்ஷாத்தாய் அறிந்து வரி சை தவறாமல் பாரதத்தைச் சுலோகமாய்க் கூறியதுபோலவே இதையும் கூறிவிட்டனர். எப்படி மனுவினால் உபதேசிக்கப்

பட்ட அர்த்தத்தைக் கிரகித்துப் பிருகு மகரிஷியால் சுலோக ரூபமாய் எழுதப்பட்ட கிரந்தத்தை மனுஸ்மிருதி என்கிறோமோ, யாக்ஞவல்கியரால் உபதேசிக்கப்பட்ட அர்த்தத்தைப்பெற்று அவாது முக்கிய சிஷ்யரான முனிவரால் சுலோக ரூபமாய் எழுதப்பட்ட கிரந்தத்தை யாக்ஞவல்கிய ஸ்மிருதி என்கிறோமோ, அதுபோல் கிருஷ்ணனால் அர்ஜுனனுக்குத் தாத்பர்யரூபமாய் உபதேசிக்கப்பட்டதைச் சுலோக ரூபமாய் வியாஸர் இயற்றியபோதிலும் பகவத் கீதையென்றே வியவகரிக்கிறார்களென்கிறார்கள்.

ஆனல், भगवान् स्वयमेव वक्ष्यति என்பதாதி முன் வசனங்களுக்குக்கதிபாதெனில்; மனுஸ்மிருதி யாக்ஞவல்கியஸ்மிருதிகளிலும் मनुः याज्ञवल्क्यः என்றெல்லாம் இருப்பதற்கு யாது கதியோ அது தான் இங்கும். ஆகவே கௌரவமாய்ப் பெயர்கள் கூறப்படுகின்றனவேயன்றி வேறல்லவென்று கொள்ளல் வேண்டும். பகவத் பாதாசார்யாள் பாஷ்யத்தைக் கவனியுங்கள். அங்குப் பாஷ்யத்தின் ஆரம்பத்தில்

**स्वप्रयोजनाभावेऽपि भूतानुजिघृक्षया वैदिकं धर्मद्वयमर्जुनाय शोकमोहमहोदधौ निमग्नायोपदिदेश । गुणाधिकैर्हि गृहीतोऽनुष्ठीयमानश्च धर्मः प्रचयं गमिष्यतीति तं धर्मं भगवता यथोपदिष्टं वेदव्यासः सर्वज्ञो भगवान गीताख्यैस्सप्तभिः श्लोकशतैरुपनिबबन्ध ।**

'தனக்குப் பிரயோஜனம் யாதொன்றுமில்லாவிடினும் சோகமோகக் கடலில் மூழ்கின அர்ஜுனனுக்கு வைதிகமான இரண்டுவித தர்மத்தையும்உபதேசித்தனர். மிகக் குணம் வாய்ந்தவர்களால் கிரகிக்கப்பெற்றும் அனுஷ்டிக்கப்பெற்றதுமான தர்மமல்லவா மேன்மைபெறும். பகவானால்உபதேசிக்கப்பெற்ற அத்தகைய தர்மத்தை ஸர்வக்ஞன் பகவானான வியாஸர் கீதையென்று பெயர் கொண்ட 700 சுலோகங்களால் கிரந்தம் இயற்றினர்' என்கிறார். ஆகவே சுலோகரூபமாய்ச்சொன்னார்என்பது கௌரவத்திற்காகவே. இவ்விதமே ஆனந்ததீர்த்தரென்ற த்வைதாசார்யரும் அபிப்ராயப்பட்டிருக்கிறார். இதனால் கீதையின் ஸாரம் பகவானால் உபதேசிக்கப்பெற்றது. சுலோக ரூபமாய்ப் பாதராயணர் இயற்றினர் என்பது நிச்சயம்,

இனி பகவத்கீதையை உபனிடதமென்று வியவகாரம் செய்கிறோம். இதன் கருத்தைச் சற்றுக் கவனிப்போம்.

இதை உபனிடதமென்பதற்குப் பிரமாணம்

अत्रोपनिषदं पुण्यं कृष्णद्वैपायनोऽब्रवीत् ।

अनुचितपदवीभिश्चिन्तयित्वा प्रयाता-
नलमलमतिमात्रै रत्र चित्ते विषादैः ।
उपनिषदमुदारामुद्गमन् पाण्डवार्थं
शरणमुपगतान्नस्त्रायते शार्ङ्गधन्वा ॥

य उपनिषदामन्ते यस्मादनन्तदयाम्बुधेः
त्रुटितजनताशोकः श्लोकः स्वयं समजायत ।
तमिह विधिना कृष्णं धर्मं प्रपद्य सनातनं
शमितदुरिताऽऽशङ्कातङ्क त्यजस्सुखमास्महे ॥

என்றும் இருக்கின்றன. ஆகவே உபனிடதமென்றே கூறலாமோவெனில் இல்லை. அத்யாத்ம சாஸ்திரத்தையே முக்கியதாத்பரியமாய் வெளியிடுகின்றதும் அபௌருஷேயமுமாய்இருப்பதுமான வாக்கியஸமூகங்களையே யோகரூடியாய் உபனிடதமென்றுசொல்லும் வழக்கமிருப்பதால் அத்யாத்ம சாஸ்திரத்தை இது விலக்கியபோதிலும் முற் கூறியபடி புருஷகர்த்திருகமாதல்பற்றி இது சாக்ஷாத்தாக உபனிடதமென அழைக்கப்படமாட்டாது. ஆயினும் உபனிடத தாத்பரியம் கொண்டிருப்பதால் உபனிடதமென்கிறோம். மகாபாரதத்தை ஐந்தாம் வேதமென்கிறோம். அதுபோலவேதான். ஆகையால் இது உபனிடதமல்ல.

स्त्रीशूद्रद्विजबन्धूनां त्रयी न श्रुतिगोचरा ।
इति भारतमाख्यानं कृपया मुनिना कृतम् ॥

ஸ்திரீ சூத்திரன் த்விஜபந்து இவர்கள் சுருதியைக் கேட்கலாகாதென்றே வியாஸமுனிவர் அவர்கள் க்ஷேமமடையுமாறு தயவுடன் பாரதத்தை இயற்றினர் என்ற சுலோகமும் ஸங்கதமாய் ஆகிறது. ஆனல் கீதையை ஸ்மிருதி என்று பகவத்பாதாவர்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

तदिदं गीताशास्त्रं समस्तवेदार्थसारसंग्रहभूतम्

என்று கூறியிருக்கின்றனர். अध्येष्यते च य इमं என்ற இந்த சுலோக வியாக்கியானத்தில் उपनिषत्सारभूतत्वादध्ययनोक्तिः என்று வேறு வியாக்கியாதாவும் கூறியிருக்கின்றனர். வேதாந்தாசார்யரும் ரகஸ்யத்திரயஸாரமென்னும் கிரந்தம் ஸ்திரீ சூத்திரத்விஜபந்து ஸாமான்யமாய் எழுதியது பற்றி அதில் உபனிடதவாக்கியம் யாதொன்றையும் வெளியிடாமல் கீதாவாக்கியங்களைப் பன்முறை உபயோகித்திருக்கின்றனர். ஆகையால் கீதை உபனிடதமேயல்ல. அதன் சுலோகங்கள் பகவான் சொன்னவையல்ல என்பது வெளியாயிற்று. இவ்விஷயத்தில் இன்னும் பல பூர்வபக்ஷ ஸித்தாந்தங்கள் கூற முடியுமாயினும் ஸித்தாந்தத்தில் இதுவேநிலை பெறுகிறபடியால் அதிக வளர்ப்பு வேண்டாமென்று இத்துடன் நிறுத்திக்கொள்வோம் சமயம் நேரிடின் மறுபடி விரித்துக் கொள்ளலாம். சுபம்.

எம். என். சுப்பிரமண்ய சாஸ்திரிகள்.

---

## "பண்டித ஸமாஜம்."

சென்ற ஜுலை-மீ 30-௳ வெள்ளிக்கிழமையன்று மாலை $4\frac{1}{2}$ மணிக்குச் சிதம்பரம் ஸ்ரீமீனாக்ஷி ஓரியண்டல் டிரைனிங்கு காலேஜில் பண்டித ஸமாஜத்தின் கீழ் புது வருஷத்திய ஆரம்பக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதற்கு மாஜி ஸப்மாஜிஸ்டிரேட்டு மகா-௱-ஸ்ரீ ராமாசாஸ்திரிகள் அவர்கள் அக்கிராஸனம் வகித்து 'வித்யை' என்ற விஷயத்தைப்பற்றி அமிருத வர்ஷம் போன்ற அரியதோர் உபன்யாசம் செய்து பண்டித சிரோமணிகளை ஆனந்தத்துக்குள்ளாக்கினார்கள். சமாஜம் நீடூழி வாழவேண்டுமென ஆசிகூறி கூட்டம் $6\frac{1}{2}$-மணிக்கு கலைந்தது.

N. வைத்தினாத சாஸ்திரியள்.

பண்டிதஸமாஜம் ஸெகிரிடரி.

---

# மாவலி.

முன்னொரு காலத்திலே மாவலி என்னும் பெயரினை உடைய ஓர் அசுரகுலத் தலைவன் இருந்தான். அவன் ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடம் அளவிடமுடியாத அன்பு வாய்ந்தவன்; மஹாவிஷ்ணுவுக்குச் சமமான பலம் பொருந்தியவன். அவன் ஒரு நாள் விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையும் தனது தவத்தினால் தன்னுடையதாக்கிக் கொண்டான்; அவற்றிலுள்ள தன்னுடைய பிரஜைகளுக்குத் தரித்திரம் இத்தன்மைத்து என்பதும் தெரியாத வண்ணம் ஆண்டுவந்தான். குடிகள் பெரிதும் மகிழ்ந்திருக்குமாறு தன்னுடைய செய்கைகளை அமைத்துக் கொண்டான். இவற்றால் அவனுடைய குடிகள் சிறிதும் கஷ்டத்திற்கு உள்ளாகாது பெருமகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தார்கள்; அவனைக் கொண்டாடினார்கள்.

என்றாலும், அந்த மாவலி தனக்கும் தேவர்களது (சுரர்களது) தலைவனான இந்திரனுக்கும் உள்ள இயற்கையான விரோதத்தினாலே இந்திரனையும், தேவர்களையும் அவர் அவர்களது உத்தியோகத்தினின்றும் நீக்கினான் அனைத்து அதிகாரங்களையும் தானே வைத்துக்கொண்டான். அவன் இயல்பாகவே தேவர்களைக் காட்டிலும் வன்மை வாய்ந்தவனாதலின், அவனைத் தேவர்களால் வெல்லமுடியவில்லை, அவனே தேவர்களை அடக்கி ஆண்டு வரலானான்.

இந்நிலையில் அவன் தேவர்களாலும், முனிவர்களாலும், செய்து நிறைவேற்ற முடியாத ஒரு வேள்வியைச் செய்வதற்கு எண்ணினான். 'உண்மைப் பொருளைச் சந்தேக விபரீதங்களில்லாமல் உணர்ந்த அந்தணர்களாகிய பெரியோர்களுக்கு வேண்டியார் வேண்டியபடி இந்த உலகத்தையும், பிறவற்றையும் தானமாகக் கொடுப்பது' என்றும் கருதித் துணிந்தான்.

இதனை உணர்ந்த தேவர்கள் அனைவரும் ஒன்று கூடினர் வைகுண்டத்திற்குச் சென்றனர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் சந்நிதியை அடைந்தனர். அவருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கினர் தங்களுக்கு மாவலியால் உண்டான இழிவைக்கூறிமுறையிட்டுக்கொண்டனர். 'தங்களது கட்டளைக்கு மாறாக நடக்கும்

மாவலியை அடக்கி எங்களை நிலை நிறுத்தவேண்டும்' என்றும் வேண்டிக்கொண்டனர். வேண்டலும் விஷ்ணுமூர்த்தி தம்மைச் சரணமாக அடைந்து குறையிரந்து வேண்டிக்கொள்ளும் தேவர்களைப்பார்த்தார் 'நீங்கள் அஞ்சுதல் வேண்டா. உரியகாலத்தில் உங்களது குறையை விலக்குவோம். அதற்கு உற்ற சமயமும் விரைவில் வரலாம் போய் வாருங்கள்'. என்று கூறி அனுப்பினார்.

இஃது இங்ஙனமாக, காசிபர் என்ற பெயரினை உடைய ஒரு முனிவர் இருந்தார். அவருக்குத் திதி, அதிதி என்னும் பெயர்களையுடைய இரு மனைவிமார் இருந்தனர். திதியின் வயிற்றிலே பிறந்தவர் தயித்தியர் எனப்படுவார். தயித்தியர்களே அசுரர்கள். அதிதியின் வயிற்றிலே பிறந்தவர் தேவர் எனப்படுவர். தேவர்கள் சுரர்கள்.

இந்தக் காசிப முனிவர் ஸ்ரீ மஹாவிஷ்ணுவைத் தமக்குப்புத்திரராக வேண்டி அவரைக் குறித்துத் தவமியற்றினார். இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலங்களையும் உணரவல்லவரும், மெய்யுணர்வுள்ளவரும் ஆகிய அந்தக் காசிபரது தவத்திற்கு மகிழ்ந்த விஷ்ணுமூர்த்தி, தாம் தேவர்களுக்குக் கொடுத்த வாக்கை எண்ணினார்; மாவலி யாகம் பண்ணக்கருதியிருப்பதையும் உணர்ந்தார். 'இதுவே, மாவலியை அடக்கித்தேவர்களுக்கு நன்மையைச் செய்யத் தக்க காலமாகும்' என்பதையும் அறிந்து கொண்டார். காசிபரது கற்புடை மனையாளான அதிதியின் வயிற்றிலே புத்திரராக அவதாரம் பண்ணினார்.

அவ்வாறு பிறந்த விஷ்ணுமூர்த்தி எங்ஙனம் காணப்பட்டார்? பெற்றோரும் இகழத்தக்க மிகக் குறுகிய உடலினராயிருந்தார். இருந்தாலும், பெற்றோரால் மிக இனிதாக வளர்க்கப்பட்டு வளர்ந்தார், வித்தைகளைக் கற்றார். வாமனர் எனப்பெயரிடப் பெற்றார். முக அழகு முதலிய வெளித்தோற்றத்தால் எவரும் அக்குழந்தையின் உருவினைக்கண்டு இழிவாகக் கருதவில்லை. மிகச்சிறிய ஆலம் விதை எவ்வாறு பெரிய மரமாகக்கூடிய சக்தியைத் தன்னுள்ளே அடக்கிக்கொண்டிருக்கிறதோ அவ்வாறே இந்தச் சிறுவனும் தன்னுள்ளே மிகப்பெரிய சக்தியை அடக்கிக்கொண்டிருக்க வேண்டும். இன்றேல் இவ்வளவு முக வசீகரம் ஒளி முதலியன இருக்கமாட்டா,' என்றும் பேசிக் கொண்டார்கள்.

இப்படியாக, மாவலி தான்கருதியபடியே பெரியதொரு வேள்வியைச் செய்யத்தொடங்கினான், வேள்விச்சாலை முதலிய வற்றை அமைத்தான். யாகத்திற்கு வேண்டிய சம்பாரங்களைக் கொண்டுவந்து நிறைத்துக்கொண்டான். யாகத்தைச் செய்து நிறைவேற்ற வேண்டிய புரோகிதர் முதலானவர்களையும் வரவழைத்தான். தான் யாகதீட்சையைச் செய்து கொண்டான். யாகம் இனிது நிறைவேறி வருகிறது. கடைசித் தினம் வந்தது, "யாவர் எதை விரும்பிக் கேட்பினும் அதை அவருக்கு விரும்பியவாறே இன்றைத்தினம் கொடுப்பேன்." என்று பறையறைவித்தான். பறையோசைக் கேட்டபலரும் யாகபூமிக்கு வந்தனர். தத்தம் விருப்பத்தைத் தெரிவித்தனர். வேண்டியவற்றைப் பெற்று மகிழ்ந்தனர். மாவலியும் தான் கூறியது குறைவுருவண்ணம் தன்னைவந்து கேட்டவர்களுக்கு 'இல்லை' என்னாது கொடுத்து வருவானாயினன்.

இங்கே இவ்வாறாக அங்கே காசிப முனிவரது புத்திரராகத் தோன்றிய வாமனராகிய வரதர் தாம் முன்னே தேவர்களுக்குக் கொடுத்த வரத்தை எண்ணினார். அவர்களது இடையூற்றை நீக்கத் தக்க காலம் வந்து விட்டதாகக் கருதினார். மாவலி செய்யும் வேள்வியைப் பார்க்க விரும்பியவர் போல அவனது யாக பூமிக்கு வந்தார். நாற்புறமும் சாற்றிப்பார்த்தார். பெரிதும் மகிழ்வுற்றார். தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கக் கருதியவர்போல மாவலியின் முன்னே வந்தார்.

வருதலும் மாவலி தன்னை அறியாது எழுந்தான்; எதிர் சென்று வணங்கினான்; உயரிய ஆசனத்திலே அமரச்செய்தான்; செய்ய வேண்டிய உபசாரங்களை முறைப்படி செய்தான்; உருவிற் சிறிய அவரைக் கண்டு முதலிலே சிறிது வியப்புற்றான்; கடைசியில் உண்மையை உணர்ந்தான். "நிறைந்தமாதவரே, தேவரீரது வரவால் அடியேன் பெறும் பேறுகளையும் எய்தியனேன். தங்களது வரவு நல்வரவாகுக. மிகப்பெரிய பெருமை வாய்ந்த தங்களைக் காட்டிலும் மேலான பிராமணர்களும் இல்லை. தங்களைத் தரிசனம் செய்யப் பெற்றதனால் என்னைப் போல உயர்வடைந்த பாக்கியவானும் இல்லை. தாங்கள் அடியேன் மீது தயைகூர்ந்து எழுந்தருளியது அடியேன் முற்பிறப்

பிற் செய்த நல்வினைப்பயனே தங்களது வரவால் அடியேனது கருத்து முற்றும் நிறைவேறியதாகும்" என்று கூறினன்.

கூறலும் முத்திக்கு வித்தாகிய முகுந்தர் மாவலியை நோக்கி "வள்ளலே நீயே விரும்பிவந்தவர்களது விருப்பத்திலும் மேலாகக் கொடுப்பவன்; வியாப்புகழினைப் பெற்றவன். உன்னை அடைந்தார் அனைவரும் பெருமையை அடைந்தவரே" என்றனர். என்றலும், மாவலி மனமகிழ்ந்து 'ஐயரே, அடியேன் நுங்கட்குச் செய்ய வேண்டியதுயாது? அதனை தயை செய்து திருவாய் மலர்ந்தருளல் வேண்டும்" என்று வேண்டினன்.

வேண்டலும், வாமனர் "அரசே, யாம் கேட்பதை நீவிர் தட்டாது கொடுப்பீரோ? கொடுப்பதாயின் எமக்கு உம்மிடமிருந்து அதிகம் பொருள் முதலியன வேண்டுவதில்லை. எம்முடைய நித்திய கருமாக்களைச் செய்வதற்கு எமக்கென ஓர் இடம் வேண்டும். அதன் பொருட்டு மூன்றடி நிலத்தைக் கொடும் அவ்வளவுவே போதுமானது" என்றனர். இச் செய்தி காதிற்புகுமுன் மாவலி மனம்மிக மகிழ்ந்து 'ஐயரே, நீவிர் வேண்டியபடியே மூன்றடி நிலத்தையும் தந்தேன் இப்பொழுதே பெற்றுக்கொள்ளுங்கள். இன்னும் தேவையிருந்தால் அதனையும் சந்தேகமில்லாது கேளுங்கள்" எனக் கூறினன்.

அக்கால், இவை அனைத்தையும் பார்த்திருந்த அசுரகுல குருவாகிய சுக்கிரன் பெரிதும் பொறுமைக்கொண்டவன் ஆனான். மாவலியினது மன நிலைமையையும், அதனால் அவன் அடையப்போகும் மேன்மையையும் அறியாதவனானான்; துக்கக் குறிப்போடும் மாவலியைப் பார்த்தான். "அன்பனே, நான் ஒன்றனைச் சொல்லக் கருதுகிறேன். சிறிது பொறுமையுடன் அதனைக் கேட்பாயாக. நீ இப்பொழுது காணும் இந்த அந்தண உருவினன் மாயவன்; வஞ்சகக்காரன். கருநிறம் பொருந்தியசிறிய உருவினன்என்று கருதிவிடாதே. ஒருகாலத்தில் இந்த அண்டத்தையும், பிற அண்டங்களையும் ஒருசேரஉண்டவன். இந்த உண்மையை உணர்ந்துகொள்" என்று கூறினன்.

கூறக்கேட்ட மாவலி சுக்கிரனைப் பார்த்து "குருவே, தங்களது கருத்து நன்றாயிருக்கின்றது. தாங்கள் கூறுகிறபடி என்னிடம் இரத்திற்கு வந்திருப்பவர் விஷ்ணுமூர்த்தி என்பது

விளங்குகின்றது. அவரோ மூன்று உலகங்களையும் காக்கும் கடவுளர். அவரது கை கீழாகவும் எனது கை மேலாகவும் இருக்க எனது முன்னே நின்று அவரே என்னைப் பார்த்து 'ஒன்றைக் கொடு' என்று கேட்பாராயின் எனக்கு அதனைக் காட்டிலும் நன்மையைத்தருவது பிறிதொன்றுண்டோ? எங்ஙனம் நான் அதனைக் கொடாதிருப்பது? அறிஞர்கள் போற்றும் நீதி நூல்கள் பிறருக்கு இல்லை என்னாது கொடுப்பதை மேன்மையாகக் கூறுகின்றனன். அங்ஙனம் தம்மிடம்வந்துகேட்பவருக்கு 'இல்லை' என்னாது கொடுப்பவர் கொடையாளிகள் எனச்சிறப்பித்துக் கூறபடுகின்றனர். அக்கொடையாளிகள் தம்மிடம் வந்து கேட்பவரை 'இவர் பகைவர்; இவர் நட்பாளர்' என்று ஆராயமாட்டார். இரத்தல் மிக இழிவானதல்லவா? இரத்திலினும் இறத்தலே மேலானது என்பது பல சான்றோர்களும் ஒத்துக்கொண்ட உண்மையாயிற்றே. இங்ஙனம் இருந்தும் 'கொடு' என்று இரப்பவர்க்கு எங்ஙனம் 'இல்லை; போ' என்று கூறுவது? கொடையாளிகள் தம்மிடம் வந்து இரந்தவர்க்குத் தமது இனிய உயிரையும் கொடுத்துதவ வேண்டாமோ? மேலும், எந்த உதவியும் தக்கார்க்குச் செய்யப்படுவது மிகமேலான பயனைத் தரும் என்று நூல்கள் கூறுகின்றனவே. சான்றோர்களும் கூறுகின்றார்களே. அங்ஙனமாயின் இந்த நாராயணனின் மிக்கத் தக்கார் உளரோ? இவருக்குக் கொடாவண்ணம் எனது முன்னே நின்று நீவிர் தடுப்பது எனது உயிருக்குப் பயந்துதானே? உயிர் பெரிதா? புகழ்பெரிதா? புகழ் அன்றோ என்றும் அழியாதிருப்பது உயிர் ஒருநாள் அழிந்துபோக வேண்டியதுதானே? இறந்தவர் இறந்தவாராக அறிவுடையோரால் எண்ணடமாட்டார்; உயிரோடிருந்தும் இறப்பவரே இறந்தவராகக் கருதப்படுவர்.

தண்டமிழ்த்தொண்டன்.

(தொடரும்)

இந்த மஹாபிலம் எவ்வளவு விசாலமுள்ளதோ அவ்வளவு விசாலமாகக் காயத்திரி ஸ்வரூபமான மண்டபம் அதனைமறைத்து அதற்கு மறைவிடமாக இருக்கின்றது.

அந்த மண்டபத்தை ஆதாரமாக்‌ கொண்டிருக்கிற அந்தப் பிலமானது நாதபிந்து யுக்தமான பரமாகாசவடிவமாயிருப்பதால் 'நாதபிந்து சம்க்ஜிதம் பரமம் வ்யோமம்' என்றும், அந்தப் பரமாகாசம் பிர்மத்துக்குச் சரீரமாயிருப்பதால் 'ஆகாச சரீரம்பிரும்மா' என்றும், அந்தப்பிரும்ம ஸ்வரூபமாகிய பரமசிவத்துக்கும் அதுவே சரீரமாயிருப்பதால் 'சம்புசரீரம்' என்றும், நிஷ்கள, ஸகல ஸ்வரூபமாயிருக்கிற பரமசிவத்தியானத்தால் அடையத்தக்க மோக்ஷத்தைப் பிரத்யக்ஷமாகக் கொடுப்பதால் 'பிரத்யக்ஷம் மோக்ஷதம்பரம்' என்றும், ஞானவான்கட்கு சித்ஸ்வரூபத்தை விளக்குவதால் 'தேவசிந்ப': என்றும் உலகத்துக்கு காமவிலாசமாயிருப்பதால் 'ஜகத்காமகளாகாரம்' என்றும், பூமிக்கு நாபிஸ்தானமாயிருப்பதால் 'குண்டலினீபதம்' என்றும், பூமிக்கு மர்மஸ்தானமாயிருப்பதால் 'ஆதி பௌதிகமர்மாங்கம்' என்றும், சர்வகாமங்களுமிருப்பதற்கு ஓர் நகரமாயிருப்பதால் 'காமநகரம்' என்றும், எவ்வுலகத்தாராலும் கொண்டாடப்படும் பிரகாசமுடைத்தாயிருப்பதால் 'திவ்யம்' என்றும, பாவங்களைப் போக்கடிப்பதாயிருப்பதால் 'அகக்னம்' என்றும், சர்வசித்தியையும் கொடுப்பதாயிருப்பதால் 'சர்வசித்திதம்' என்றும், இந்திரிய காமங்களை யடக்குவதால் 'தபஸ்தானம்' என்றும் ஒருவராலுமறியக்கூடாத பரமாகஸ்யமாயிருப்பதால் 'சூக்ஷ்மபிலம்' என்றும், திருமூர்த்திகள் ஈசசம்பூந்தமான ஸ்வரூபங்கள் திக்குகள் உலகங்கள் மேரு கோரூபமாகிய பூமி ஆகிய இவைகட்கு ஒன்பது துளையோடு கூடிய மார்க்கமாயிருப்பதால் 'நவத்துவாரஸ்ய மார்க்கம்' என்றும், பூமிக்குக் காரணமாகிய யோனி ஸ்தானமாயிருப்பதால் 'பூயோனி' என்றும்;

இஷ்ட காமத்தை உத்தேசித்து யார் யார் எந்தெந்த விதமாகத் தருமங்களைச் செய்தபோதிலும் ஒரு தரம் செய்தபோதிலும் அந்தந்தத் தருமங்களை நல்ல தருமங்களாக்கி அவர்களுக்கு அந்தத் தத்தருமம் ஒன்றுக்கு ஒரு பலனுகவல்லாமற் கோடி பலனுகக் கொடுப்பதாயிருப்பதாலும், குபேரன் போல் சம்பத்துண்டாக

வேண்டுமென்று திரவியத்தை விரும்புவோருக்கு அத்திரவியத்தைக் கோடியாகக் கொடுப்பதாயிருப்பதாலும். மோக்ஷமானது காமத்தின் கோடியில் (முடிவில்) இருப்பதால் அந்த மோக்ஷ இன்பத்தைக் கைவிட்டுக் காமத்தையே விரும்புவோருக்கு அந்தக் காமத்தைக் கோடியாகக் கொடுப்பதாயிருப்பதாலும், மோக்ஷமானது புருஷார்த்தத்தின் கோடியாக (முடிவாக) இருப்பதால் அந்தக்காம இன்பத்தைக் கைவிட்டு மோக்ஷத்தையே விரும்புவோர்க்கு அந்த மோக்ஷ இன்பத்தைக் கோடியாகக் கொடுப்பதாயிருப்பதாலும், இங்ஙனம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் தனித்தனியே விரும்புவோருக்கு அவ்வண்ணமே தனித்தனியாயும் அறம்பொருள் இன்பங்களை விரும்பாது மோக்ஷத்தை மாத்திரம் விரும்பும் மோக்ஷகாமிகளுக்கு அந்த மோக்ஷத்தோடு ஏனைய மூன்றையும் தர்மம் அர்த்தம் காமம் என்கிற மூன்றை மாத்திரம் விரும்புவோர்க்கு அவற்றையும் அவற்றோடு மோக்ஷ விருப்பத்தையும் கொடுப்பதாகவிருப்பதாலும், பரமசிவ மூர்த்தி நெற்றிக்கண்ணினால் தகிக்கப்பட்ட காமனைப் போலக் காமாக்ஷி தேவி தன்னுடைய நேத்திரத்தினின்றும் லீலாமாத்திரமாய்க் கோடி காமங்களை யுண்டாக்கியதாலும் 'காமகோடி' என்றும்;

வீட்டை அடைய விரும்புவோர்க்கு அறம், பொருள், இன்பங்களோடு அவர்கள் விரும்பிய வீட்டையும், அறம், பொருள், இன்பங்களை விரும்புவோர்க்கு அவற்றோடு அவர்விரும்பாத வீட்டையும் கொடுத்ததற்கு அந்நான்கும் அப்பிலத்தை யிடமாகக் கொண்டிருத்தலால் 'காமகோஷ்டம்' என்றும் சொல்லப்படும்.

சிவபெருமான் முன்னொரு காலத்தில் தாருகாவனத்தில் சென்று ருஷி பத்னிகளுடைய கற்பை அழித்த காலத்தில் அவர்கள் கணவர்களாகிய ருஷிகள் சிவத்துவேஷிகளாய் எவ்வுருவும் தன்னுருவமாகவேயுடைய சிவபரஞ்சுடரைப் பலவாறான நிந்தை மொழிகளால் இகழ்ந்து, பின்னர் அநாதி நித்யமாகிய அச்சிவ பரஞ்சுடரை அழிக்க எண்ணிப் புலி, பாம்பு, மான், கொக்கு, முயல்கள் உடுக்கை, அக்னிமுதலியவைகளை ஏவியும், அவையெல்லாம் அவருக்கு அணிகலமாகவும், ஆடைமுதலியனவாகவும் ஆனமைகண்டு மனம்புழுங்கி 'இவனை இனி கண்டோரெல்லாம் நகைக்கும் வண்ணம் செய்யவேண்டும்' என்று துணிந்து மிகவும் அகங்

காரங்கொண்டு 'அலியாய்ப்போக வேண்டும்' என்று சபித்துப் புலம்பிக் கொண்டிருந்தனர். சிவபெருமானார், '(பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளி சேர் விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி) அநாதியே நின்றருளும் தமதியல் புணாராது கர்ம பிரும்ம வாதிகளாய்க் கருமத்தைையே கடவுளாக மேற்கொண்டிருக்கின்றனர்' என்று அவர்களது அறிவின் சிறுமையைத் திருவுளத்தெண்ணித் தாம் அவர்கள் கண்டு நாணமடையும் வண்ணம் சிறிதுபொழுது ஆனந்தக்கூத்தாடிக் கைலாஸத்துக்கு எழுந்தருளிப்பார்வதியாரோடு வீற்றிருந்தனர்.

இச்செய்தி இங்ஙனம் நிற்க பந்தகன் என்னும் இராக்ஷஸன் பிரமன் அனுக்கிரகத்தாற் சூரிய சந்திரர்களிருக்கும் அளவும் சிரஞ்சீவியாயிருக்கும் வரத்தைப் பெற்று இந்திராதி தேவர்களுக்கு வைரியாயும், சித்தர் முனிவர் முதலியோர்க்குப் பிராணகண்டகனுயும் உலவி எல்லா உலகங்களையும் வென்று, பின்னர்க் கைலாஸத்திற்குச் சென்றனன். ஓராதார்க்கு ஒளிக்கும் ஒளியானும் கரவாடும் வன்னெஞ்சர்க்கு அரியானும் ஆகிய இறைவன் அவன் கண்ணுக்குத் தோன்றுமல் தமது கணங்களோடு மிருப்பபந்தகாசுரன் தன் பரிவாரங்களோடு கைலையிலிருந்து எல்லாவுயிர்களையும் பிடித்துக்கொண்டு வாழ்நாளைக் கழித்து வந்தனன்.

இவனது உபத்திரவத்தைச் சகிக்க முடியாத தேவர்கள் கைலாசத்திற்கு வடக்கிலுள்ள கோமுகம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்திலிருக்கும் பிலத்துட் சென்று காஞ்சி க்ஷேத்திரத்தில் காமகோடியாகிய பிலத்தின் வழியாய் வெளியே வந்தனர். அப்பிலமூலத்தில் காமகோடீஸ்வரியாயும், மஹாதேவியாயும், திரிபுர சுந்தரியாயும் எழுந்தருளி விளங்கும் தேவியைத் தரிசித்து நமஸ்கரித்துத் தங்கள் தங்களுக்கு வேண்டியவைகளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கும் பொழுது சிவபெருமானார் அப்பிலத்தின் மகிமையைத் தேவர்களுக்குத் தெரிவிக்க அப்பிலத்தினின்றும் வெளிவந்து கோடி சூரியப் பிரகாசமாய்த் திவ்ய ரூபத்தோடும் நின்று 'ஒ, தேவர்களே, கோரூபமாய் விளங்கும் பூமிக்குக் கோமுக க்ஷேத்திரமுகம் என்றும், ஸ்ரீபுரம் சிரம் என்றும், இமாலயம், கண்டம் என்றும், கேதாரம் உதரம் என்றும், காசி பிருஷ்

டம் என்றும், கமலாலயம் அதற்கு மூலம்என்றும், காஞ்சி இடை என்றும் இக்காமகோடி பீடம் அதற்கு நடு என்றும், அதிலுள்ள பிலம் துவாரம்என்றும் சொல்லிவரும்பொழுது தேவர்கள் இறைவனை வணங்கித் தேவரீருடைய திருமேனி எக்காலத்தும் கண்டறியாத திவ்யதேஜஸோடும் இப்பொழுது ஒளிவிட்டெரிகின்றதே இதன் காரணம் என்னையோ" வென்று வினவினர்.

பெருமானார் "ஓ தேவர்காள், யான் பூமி தேவிக்கு முகமாகிய கோமுகம் என்றும் க்ஷேத்திரத்தின் வழியாய்ப் பிரவேசித்துக் குண்டலினி மார்க்கமாய் இக்காமகோடி பிலத்துவாரத்தின் வழியாய் வெளிவந்தேனாகலான் இவ்வரியஉருவத்தோடும் விளங்குகின்றேன். சாதாரணமாய் உலகிலுள்ளவர்கள் பொன்னினால் ஒரு பசுவைப்போலும் உருவம் அமைத்து அதன் கர்ப்பத்தில் வசித்துப்பின் வெளிப்படுவாராயின் அவர்கள் பிரம தேஜஸைப் பெற்று விளங்குவாரென்றால் சிற்சக்தி ஸ்வரூபமாகிய இக்காமகோடி பிலத்தின் வழியாய் வெளிப்பட்டயான் இப்பேரொளியோடும்விளங்குவது ஓர் ஆச்சர்யமா! இப்பிலத்தின் பெருமையையான் என்னென்று கூறுவேன்! ஓ, தேவர்காள், எவனொருவன் இக்காமகோடி பீடத்தை நாடோறுமாவது, ஒரு வாரமாவது, ஒரு பக்ஷமாவது, ஒரு மாதமாவது, பிரதக்ஷணம் செய்கின்றானோ அவன் மஹாபாதகனாயினும் முக்தனாவான். பிரதக்ஷணம் செய்யும் ஒவ்வொரு அடிக்கு ஒவ்வொரு கோ கர்ப்பத்தினின்றும் பிறந்த பலனையடைவான். நாடோறும் பிரதக்ஷணம் செய்பவன் அடையும் பலனகள் சொல்லி முடியுமா? பிரதக்ஷணம் செய்யாதவன் தேவனாயினும் அவன் கழுதைக்குச் சமமாவன்" என்று காமகோடி பிலத்தின் பெருமைகளை எடுத்துக் கூறி "நீங்கள் இப்பீடத்தை வலம் வருவீராயின் பந்தாகாசுரனால் நீங்களடைந்திருக்கும் துன்பத்தை நீங்கப் பெறுவீர்கள். அவனது துன்பம் நிவிர்த்தியாகுமளவும் இப்பிலத்தருகிலுள்ள ஜண்பக விருக்ஷத்தில் நீங்களனைவரும் கிளி வடிவம் கொண்டு வாழக்கடவீர்கள்" என்று வரம் தந்து போயினர். பின்னர் தேவர்களெல்லாம் சிவபெருமானார் அருளியவாறே அப்பிலத்தை நாடோறும் தவறாமல் பிரதக்ஷணஞ் செய்து கிளியுருவங்கொண்டு ஜண்பக விருக்ஷத்தில் பதினாயிரம் வருஷம் வசித்திருந்தனர்.